# ஆர்.எஸ்.எஸ். பெற்ற பிள்ளையை சீராட்டி வளர்க்கப் போயிருக்கிறாரா?

## திருமாவுக்கு எதிராக வி.சி.க.வுக்குள்ளேயே வெடிக்கும் விமர்சனம்!

‘தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு தி.மு.க. தலைமையிலான கூட்டணியை காப்பாற்றும் வலிமை எனக்கு இல்லை’ என்று வி.சி.க. தலைவர் திருமாவளவன் விவரித்திருக்கும் நிலையில், “ஆர்.எஸ்.எஸ். பெற்றெடுத்த பிள்ளைதான் விஜய் என்று சொன்ன திருமா, இப்போது அந்தப் பிள்ளையை சீராட்டி, தாலாட்டி வளர்த்தெடுக்கப் போயிருக்கிறாரா... இப்போது அம்பேத்கர், பெரியார் எல்லாம் எங்கே போனார்கள்..?” இப்படியொரு விமர்சனம் வி.சி.க. வட்டாரத்துக்குள்ளேயே இப்போது ஓடிக் கொண்டிருக்கிறது.




இந்த விமர்சனத்தை பற்ற வைத்திருக்கும் வி.சி.க. முக்கிய நிர்வாகிகளிடம் இதுகுறித்து பேசினோம்.

“எப்போதுமே முடிவுகளை தெளிவாக எடுக்கும் திருமா, இந்தத் தேர்தலில் ரொம்பவே நிலை தடுமாறிவிட்டார். தி.மு.க. விடம் 10 தொகுதிகளும் ஒரு ராஜ்ய சபா சீட்டும் கேட்டிருந்தாலும் தந்திருப்பார்கள். ஆனால், ஏனோ அதை அழுத்திக் கேட்கும் நிலையில் அவர் இல்லை. அதனால், போனதும் காபியைக் குடித்துவிட்டு 8 சீட்டுக்கே ஓகே சொல்லிவிட்டு வந்துவிட்டார்.

அதேசமயம், ஆளூர் ஷா நவாஸ், பனையூர் பாபு ஆகியோர் தி.மு.க. அனுதாபிகளாக இருக்கிறார்கள். அதனால் இம்முறை அவர்களுக்கு சீட் தருவதில்லை என்றும் முன்கூட்டியே முடிவாகிவிட்டது. அதனால்தான் தொகுதிகள் எண்ணிக்கை முடிவானதும் 3 நாட்கள் டெல்லியில் போய் முடங்கினார் திருமா. தி.மு.க. தொடர்ச்சியாக அழைத்த பிறகே தொகுதிகளை இறுதி செய்ய டெல்லியிலிருந்து கிளம்பி வந்தார். தொகுதிகள் முடிவானதும் அலைபேசியை அணைத்து வைத்துவிட்டு ஓட்டல் ஓட்டலாக மாறிமாறி ஒடிக்கொண்டு இருந்தார்.

யாரும் எதிர்பாராத விதமாக காட்டுமன்னார்கோவில் தொகுதியில் தானே போட்டியிடப் போவதாக அறிவித்த திருமா, ‘தொங்கு சட்டமன்றம் அமையலாம்’ என்று பலர் முன்னிலையில் அதற்கான காரணத்தைச் சொன்னார். இது தி.மு.க. தலைமைக்கு தெரிந்ததும் அவர்கள் டோட்டல் அப்செட். திருமா சட்டப்பேரவைக்கு வந்தால் அவரது சிதம்பரம் மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கு மீண்டும் 50 கோடியை யார் செலவழிப்பது என்ற கேள்வி தி.மு.க. தரப்பில் எழுப்பப்பட்டது.

இதுபோன்ற காரணங்களால் தனது முடிவை மாற்றிக்கொண்ட திருமா, தனக்குப் பதிலாக, காங்கிரஸ்காரரான ஜோதிமணியை காட்டுமன்னார்கோவில் வேட்பாளராக்கினார்.

அந்தத் தொகுதியின் அப்போதைய சிட்டிங் எம்.எல்.ஏ.வான சிந்தனைச் செல்வன் மீண்டும் அந்தத் தொகுதியையே கேட்டு மன்றாடியும் அவர் மனம் மாறவில்லை. இந்த நடவடிக்கைகள் அனைத்துமே தி.மு.க., வி.சி.க. தொண்டர்கள் இடையே இணக்கத்தை உருவாக்கவில்லை. இது

**குள.சண்முகசுந்தரம்**

திருமாவுக்கும் தெரியும். அதனால்தான் வாக்கு எண்ணிக்கைக்கு முன்பே, ‘சில இடங்களில் வி.சி.க. தோழர்கள் தி.மு.க. வேட்பாளர்களுக்கு ஒத்துழைப்புத் தரவில்லை’ என்று அவரே சொன்னார்.

வி.சி.க. கேட்ட தொகுதிகளை தி.மு.க. கொடுக்கவில்லை என்று சொன்ன திருமா, ‘பல்லாவரம் கேட்டோம் பண்ருட்டியைக் கொடுத்தார்கள், அரூரைக் கேட்டோம் அரக்கோணம் கொடுத்தார்கள்’ என்றெல்லாம் புலம்பினார். 0911 109 அப்படியெல்லாம் கேட்கவில்லை என்று தி.மு.க. தரப்பில் இருந்தே எங்களுக்குச் சொன்னார்கள். அப்படியே கேட்ட தொகுதிகள் கிடைக்காவிட்டாலும் ஷா நவாஸுக் காக அவரது சிட்டிங் தொகுதியான நாகையை யாவது கேட்டு வாங்கி இருக்கலாமே.... இருபது வருடங்களுக்கும் மேலாக கட்சிக்காக உழைத்தவர்களை விட்டுவிட்டு காங்கிரஸ்காரரை வம்படியாய் இழுத்துவந்து நிறுத்த வேண்டிய அவசியம் என்ன வந்தது?

தேர்தலுக்கு முன்புதான் இப்படி என்றால் ரிசல்ட்டுக்குப் பிறகு திருமா எடுத்த முடிவுகளும் குழப்பத்தின் உச்சம். தன்னைச் சந்தித்த கூட்டணித் தோழர்களிடம் ‘நீங்கள் என் கூடவே இருங்கள்’ என்று கேட்டுக் கொண்டார் ஸ்டாலின். ஆனால் ஆதவ் அர்ஜுனா, ‘நீங்கள் கம்யூனிஸ்ட்களையும் அழைத்துக் கொண்டு வந்துவிடுங்கள்’ என திருமாவுக்கு அசைன்மென்ட் கொடுத்தார். கம்யூனிஸ்ட்களும் முதல் ஆளாக த.வெ.க. ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துவிட்டார்கள். அதன் பிறகுதான் ‘திருமாவை முதல்வராக்கு கிறோம்’ என்று அ.தி.மு.க.வும் தி.மு.க.வும் சேர்ந்தே ஆஃபர் வைத்தன.

அதனால் தனது முடிவை அறிவிக்காமல் தாமதப்படுத்திய திருமா, இது விஷயமாக கம்யூனிஸ்ட்களிடமும் பேசினார். ஆனால் அவர்களோ, “தோழர் இது எங்களின் பொலிட் பீரோ எடுத்த முடிவு; அப்படி எல்லாம் மாற்ற முடியாது’ என தங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்துவிட்டார்கள். பா.ம.க.வும் திருமாவை முதல்வராக்க சம்மதிக்க வில்லை. இத்தனைக்கும் பிறகுதான் த. வெ.க. அரசுக்கு ஆதரவளிக்கும் முடிவுக்கு வந்தார் திருமா.

அதைத்தொடர்ந்து, வன்னி அரசுவை அமைச்சர் பதவிக்கு சிபாரிசு செய்வதில் வி.சி.க.வுக்குள் இரண்டு விதமான கருத்துகள் வெடித்தன. அவரை அமைச்சராக்கினால் இன்னொரு பவர் சென்டர் ஆகிவிடுவார் என்று சிலர் சந்தேகம் கிளப்பினார்கள். த.வெ.க. தரப்பும், திருமாவே அமைச்சரானால் நன்றாக இருக்கும் என தனது விருப்பத்தைச் சொன்னது. இருப்பினும் கட்சியைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் வன்னி அரசுக்கே வாய்ப்பளித்தார் திருமா. இனி என்ன நடக்கப் போகிறது என்று தெரியவில்லை” என்று சொல்லி முடித்தார்கள்.

‘’விஜய் சினிமா தியேட்டரில் விசில் அடிக்கட்டும்... சட்டமன்றத்தில் விசில் அடிக்க வேண்டாம்” என்று சொன்ன திருமா, இந்த விமர்சனங்களை எல்லாம் எப்படிசமாளிக்கப் போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

நன்றி:
**‘இந்து தமிழ்திசை’**
24.5.2026

---

### பொதுமக்களிடமிருந்து

# தப்பித்த ‘ரீல்ஸ்’ ஆட்சி எம்.எல்.ஏ.!

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!

மின்வெட்டு அதிகமாச்சுன்னு எம்.எல்.ஏ வீட்டுக்கு போய் போராட்டம் நடத்தி இருக்கானுங்க.

ஒருத்தர் வெளிய வந்து எம்.எல்.ஏ வீட்டுல இல்லன்னு சொன்னதும் போய்ட்டாங்க..

வெளியே வந்து சொன்னவர் தான் எம்.எல்.ஏ.

மூஞ்சியை பார்க்காமலேயே ஓட்டு போட்டதால் தப்பித்த எம்.எல்.ஏ

---

### நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு! மதுரவாயல் வடக்குப் பகுதி

# 143வது வட்டக் கழகக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் ச.சசிகுமார் அறிவிப்பு!

சென்னை, மே.25-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 143வது வட்ட கழக கூட்டம் வட்ட அவை தலைவர் எஸ்.ரகுபதி தலைமையில் இன்று (25-05-2026 - திங்கட்கிழமை) மாலை சரியாக 7.00 மணியளவில் பகுதி கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

ஜி.மூர்த்தி, என்.ஆர். மணிவண்ணன், தாட்சாயிணி பக்தவச்சலம், கே. ஆறுமுகம் ஆகியோர் முன்னணியில் நடைபெறும் இக்கூட்டத்தில் நமது பகுதி செயலாளர் வளசரவாக்கம் மண்டல குழு சேர்மன் நொளம்பூர் வே.ராஜன் கலந்து கொண்டு சிறப்பு ஆலோசனை வழங்க உள்ளார்.

எனவே வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணியின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக செயல் வீரர்கள் பிஎல்ஏ-2 & பிஎல்சி, பிடிஏ, ஐ.டி. விங் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி வட்ட கழகத்தின் சார்பில் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா நிகழ்ச்சி, மற்றும் கழக ஆக்க பணிகள்

இவ்வாறு 143வது வட்டச் செயலாளர் ச.சசிகுமார் தெரிவித்துள்ளார்.

---

### மனம் வெறுத்து தூற்றுவதாக இருக்கக் கூடாது!

# ஆட்சி மாற்றம் என்பது மக்களுக்கு ஏற்றத்தைத் தர வேண்டும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, மே. 25-

மனம் வெறுத்து தூற்றுவதாக இருக்கக் கூடாது. ஆட்சி மாற்றம் என்பது மக்களுக்கு ஏற்றத்தை தர வேண்டும் என்று தினகரன் நாளேடு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் வருமாறு:-

“பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் கடந்த ஆட்சியில் போதுமான பாதுகாப்பில்லை. அவர்களின் பாதுகாப்பிற்காக பல்வேறுசிறப்புதிட்டங்களை கொண்டு வருவேன். தமிழகத்தின் எந்த ஒரு மூலையிலும் பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள் எதுவும் நடக்காத வகையில் சிறப்பு திட்டங்கள் வகுக்கப்படும்,” என்பது தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் யின் தேர்தல் பிரசார கூட்டங்களில், காதுகள் அனைத்திலும் வந்து மோதிய ஒரு உறுதிமொழி. இதை நம்பி, அவரது கட்சிக்கு வாக்களித்தவர்களில் கணிசமானவர்கள் பெண்கள். கடந்த 10ம் தேதி, தமிழக முதல்வராக பொறுப்பேற்ற விஜய் பெண்கள் பாதுகாப்பிற்காக சிறப்பு சிங்கப்படை அமைக்கப்படும் என்பது, அவர் கையெழுத்திட்ட முக்கிய மூன்று கோப்புகளில் ஒன்றாக இருந்தது.


தினகரன்
மே 24, 2026 ஞாயிற்றுக்கிழமை
ரீல்ஸ் ரியல் ஆகுமா?
“பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் கடந்த ஆட்சியில் போதுமான பாதுகாப்பில்லை. அவர்களின் பாதுகாப்பிற்காக பல்வேறு சிறப்பு திட்டங்களை கொண்டு வருவேன். தமிழகத்தின் எந்த ஒரு மூலையிலும் பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள் எதுவும் நடக்காத வகையில் சிறப்பு திட்டங்கள் வகுக்கப்படும்,” என்பது தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் யின் தேர்தல் பிரசார கூட்டங்களில், காதுகள் அனைத்திலும் வந்து மோதிய ஒரு உறுதிமொழி.

இதற்காக சிலாகித்து முதல்வருக்கு பாராட்டு பத்திரம் வாசித்தன பெண்ணிய மேம்பாட்டு அமைப்புகள். ஆனால் அடுத்தடுத்த நாட்களில் நடந்த சம்பவங்கள், இது ஒரு வெற்று வாய்ஜால” அரசு என்பதை வெளிச்சம் போட்டு காட்டி விட்டது. சென்னை மெரீனாவில் மனநிலை பாதிக்கப்பட்ட சிறுமி பலாத்காரம், வந்தவாசியில் ஓடும் லாரி யில் சிறுமி கூட்டு பலாத்காரம், கிருஷ்ணகிரியில் காவல்நிலைய பெண் ஊழியர் பலாத்காரம் என்று அடுத்தடுத்து நிகழ்ந்த அவலங்கள், இதற்கு சாட்சியமாக அமைந்தது. இவை அனைத்திற்கும் உச்சமாக அரங்கேறியுள்ளது கோவையில் நடந்த பத்து வயது பள்ளி மாணவிக்கு நடந்த பலாத்கார படுகொலை சம்பவம்.

சூலூர் பகுதியில் தனது வீட்டிற்கு அருகே விளையாடிக் கொண்டிருந்த 10 வயது சிறுமி, அதே பகுதியை சேர்ந்த சிலரால் கடத்தி செல்லப் பட்டு, பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார். பின்னர், அவர் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டு அங்குள்ள குளக்கரையில் வீசப்பட்டு கிடந்தார்.

ஊடகங்களில் இந்த தகவல் வெளியாகி, தமிழ கம் முழுவதும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தி யது. ஆனால் தமிழக முதல்வரின் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல்துறையோ, புகார் கொடுத்த பெற்றோரை சமாதானம் செய்யும் வேலையில் தான் முதலில் இறங்கியுள்ளது. சிறுமியை கண்டு பிடித்து நெருங்கி விட்டோம். இன்னும் சில மணி நேரங்களில் மீட்டு விடுவோம் என்று பொய்யான உறுதியளித்தது. ஆனால், சிறுமியின் உயிரற்ற உடலை மட்டுமே அவர்களால் மீட்க முடிந்தது. இதனால் கொதித்தெழுந்த மக்கள், அரசுக்கு எதிராக பெரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள னர். இதன் எதிரொலியாக, சிறுமியின் பக்கத்து வீட்டை சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர். ஆனால், மரணித்து போன ஏதுமறியாத அந்த சிறுமிக்காக, சிறிய வருத்தத்தை கூட உடனடியாக பதிவு செய்யவில்லை முதல்வர். தற்போது எதிர்கட்சிகளின் கடும் கண்டனத்தை எதிர்கொள்ள முடியாமல், கண் துடைப்புக்கு அறிக்கை ஒன்றை நேற்று மாலை வெளியிட்டுள்ளார்.

இவர் அரியணை ஏற வேண்டும் என்று ஆசைப்பட்ட கோடி மழலைகளில் ஒருவருக்கு தான், இந்த கொடூரம் நேர்ந்துள்ளது என்பதை, முதல்வர் சிறிதேனும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இனிமேலும் இது போன்ற கொடூர நிகழ்வுகள் தொடராத வண்ணம், முதல்வர் சாட்டையை சுழற்ற வேண்டும். வெறுமனே ரீல்ஸ் அரசாக இல்லாமல் ரியல் அரசாக உருவெடுக்க வேண்டும். மொத்தத்தில் மாற்றம் ஒன்று தான் மாறாதது என்பது இயற்கையின் நியதி. ஆனால், ஆட்சி அதிகாரத்தில் மாற்றம் என்பது, மக்களுக்கு ஏற்றத்தை தர வேண்டும். மனம் வெறுத்து தூற்றுவதாக இருக்கக்கூடாது. இதை முதல்வரும், புதிய அரசும் புரிந்து செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

# சட்டமன்றத் தொகுதி கள ஆய்வு!

கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு அறிவிப்பின்படி சென்னை தென்மேற்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக குழுவினர் மாநில மகளிர் அணிச் செயலாளர் **ஹெலன் டேவிட்சன்** மற்றும் **இளமகிழன்** ஆகியோர் அடங்கிய கள ஆய்வுக்குழுவினா சென்னை தென்மேற்கு மாவட்டத்திற்க்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில், தொகுதி வாரியாக கீழ்க்கண்ட பட்டியல் உள்ளவாறு காலை, மாலை ஆய்வு மேற்கொள்ள உள்ளனர்.

| தேதி | கிழமை | தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 29-05-2026 | வெள்ளிக்கிழமை | தியாகராயா நகர் | ஆ.சந்திரசேகர் திருமண மண்டபம் எல்லையம்மன் கோவில் தெரு மேற்கு மாம்பலம் |
| 30-05-2026 | சனிக்கிழமை | மயிலாப்பூர் | P.K மஹால், சித்ரகுளம், மயிலாப்பூர் |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 24.5.2026

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# சூரியச் சரித்திரம்



1991ல் துறைமுகத்தில்
கலைஞர்

எழும்பூரில்
பரிதி
இளம்வழுதி என

இரண்டே தொகுதிகளில் தி.மு.க.வுக்கு வெற்றி

மீதமுள்ள
232 தொகுதிகளிலும் அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியே
மொத்தத்தையும் அள்ள ..

முடிந்தது
தி.மு.க.
என்றனர்...

ஆனால்
அடுத்து வந்த 1996தேர்தலிலேயே

முதலமைச்சராக இருந்த அம்மாவையுமே பர்கூரில் வீழ்த்தி

வரலாறு காணாத அளவில் வாகை சூடியது தி.மு.க...
ஆம்

யானை போல
பூமி அதிர விழும்

விழுந்த
வேகத்தில்

குதிரை போல
உலகம்
வியக்க எழும்...

அஸ்தமித்தது
என கண்மூடித்
திறக்கும்
வேகத்தில்

உதிக்கும்
சூரியனாக...

அதுவே
தி.மு.க...

**என்னநாஞ்**
**சொல்றது!**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்